தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (05.01.2024) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 121 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கியதைத் தொடர்ந்து, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு மீதமுள்ள 111 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை பட்டினப்பாக்கம், எம்.ஆர்.சி. நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் விஜயபாஸ்கர் மனநோயாளியாக மாறி இருக்கிறார் !

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, ஜன.7 -

புதுக்கோட்டை அண்ணா சிலை அருகே உள்ள காந்தி பூங்கா பின்புறம் 1.97 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டடத்தை சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இதில் புதுக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில் உள்ளிட்டோர் பங்கேற்று நூலகத்தையும் அறிவு சார் மையத்தையும் பார்வையிட்டனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கூறியதாவது:-

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அமலாக்க துறையின் செயல்பாட்டை எந்த அளவுக்கு துணிச்சலோடு எதிர் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் துணிச்சலோடு எதிர் கொண்டிருக்கிறார் என்பதை கடந்த நிகழ்வுகள் எடுத்துக்காட்டும்,

புதுக்கோட்டை மாவட்டத்தை பொருத்தவரை அதிகமான ஜல்லிக்கட்டு நடைபெறும் மாவட்டம். 2016லிருந்து 2021 வரை அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த நான் ஏதாவது ஒரு ஜல்லிக்கட்டுக்கு அனுமதி கேட்டால் எந்த ஊருக்கு பரிந்துரை செய்கின்றோமோ அந்த ஊருக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று உத்தரவிட்ட அப்போது அமைச்சராக இருந்த மாவட்டத்தை சேர்ந்த விஜயபாஸ்கர் இன்று ஜனநாயக முறைப்படி ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டும் என்று கூறுகிறார்.

எங்களைப் பொறுத்தவரை அன்று நாங்கள் பட்ட கஷ்டம் இன்று எந்த எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரும் படக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் சுதந்திரமாக செயல்பட அனுமதிகளை தந்து அந்த உறுப்பினர்களும் போட்டியில் பங்கேற்கிறார்கள்.

ஆனால் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு தான் முக்கியத்துவம் உள்ளதைப் போல் நினைத்துக் கொண்டு கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்த அராஜகத்தை எல்லாம் மறந்து விட்டு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி விஜயபாஸ்கர் பேசி வருவது வேடிக்கையாக உள்ளது.

அதேபோல் புதுக்கோட்டையில் உள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி செயல்படவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார் விஜயபாஸ்கர். ஆனால் அந்த மருத்துவக் கல்லூரி செயல்படுகிறது 50 மாணவர்கள் சேர்க்கை உடன் நோயாளிகளுக்கும் தினசரி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதையெல்லாம் அவர் சென்று பார்த்திருக்கலாம் ஆனால் அவர் பார்ப்பதை தவிர்த்து விட்டு மருத்துவக் கல்லூரி செயல்படவில்லை என்று. கொரோனா காலத்தில் வெறுமன அறிவிப்பை மட்டும் செய்துவிட்டு நிதி ஒதுக்கவில்லை பின்னர் எங்கள் ஆட்சி காலத்தில் நிதி ஒதுக்கி கட்டடத்தைக் கட்டி முடித்து பல் மருத்துவக் கல்லூரி செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இதிலிருந்து முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் மனநோயாளியாக மாறி இருக்கிறார் என்பது எங்களுக்கு தெரிகிறது. எனவே அவரது பெற்றோரும் மனைவியும் உரிய நடவடிக்கைகளை எடுத்து அவரை மனநோயிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

பிரதமர் அன்று நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும் பொழுது வந்தார். அப்போது எங்களது கருத்துக்களை தெரிவிக்க எதிர்ப்பை நாங்கள் அவருக்கு காட்டினோம். இன்று தி.மு.க. ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெறுகிறது. அதனால் எந்த ஒரு அசம்பாவிதம் இங்கு நடந்தாலும் அதற்கு நாங்கள் தான் பொறுப்பு. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க கூடிய தலையாயக் கடமை தமிழ்நாடு அரசுக்கு உள்ளது. இன்று உலக முதலீட்டாளர்கள் எல்லாம் தமிழ்நாடு நோக்கி வருகிறார்கள் என்று சொன்னால் தமிழ்நாடு முதலமைச்சர் 31 மாத காலத்தில் தமிழ்நாட்டை மிகப் பெரிய அமைதி பூங்காவாக எந்தவிதமான மத இன கலவரங்கள் இல்லாமல் பாதுகாப்பான மக்களை வைத்து சகோதரத்துவத்தோடு விட்டுக் கொடுத்து செல்வதன் காரணத்தினால் தான் இந்தியா விலேயே தொழில் செய்ய ஏற்ற மாநிலம் தமிழ்நாடு என்ற முடிவுக்கு உலக முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க வந்துள்ளனர். எங்களைப் பொறுத்தவரை அமைதியை நிலைநாட்ட வேண்டும். அதுதான் எங்களது குறிக்கோளை தவிர எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்பது எங்களுடைய குறிக்கோள் அல்ல.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு அதிக நிதி தருவதாக கூறி கடன் கொடுத்ததை எல்லாம் புள்ளி விவரங்களாக சேர்த்து அதனை தந்துள்ளனர். நாங்கள் கூறுவது எங்களுக்கு அளித்த கடனை விட்டுவிட்டு நாங்கள் கொடுத்த வரியிலிருந்து எங்களுக்கு என்ன திருப்பி தந்துள்ளீர்கள் என்பதை பற்றி வெள்ளை அறிக்கை தர தயாராக இருக்கிறார்களா? என்றால் அது கிடையாது. அவர்கள் என்னென்னவற்றுக்கு கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் சேர்த்து நிதி கொடுத்ததாக கூறுகின்றனர்.

உத்திரபிரதேசத்திற்கும் குஜராத்திற்கும் மகாராஷ்டிராவிற்கும் ராஜஸ்தானுக்கும் எவ்வளவு கொடுத்துள்ளார்கள் அங்கிருந்து எவ்வளவு வருமானம் அவர்களுக்கு சென்றது என்ற கணக்கை வெளியிட்டார்கள் என்றால் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டு இருக்கிறது என்ற உண்மை தெரியும். அதனை ஒன்றிய நிதி அமைச்சர் செய்தால் நாங்கள் வரவேற்கின்றோம்.

திருச்சி விமான நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு ராமநாதபுரம் தூத்துக்குடி கன்னியாகுமரி திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் தமிழ்நாட்டில் உள்ள ஒட்டுமொத்தமாக பா.ஜ.க.வில் உள்ள 6000, 7000 உறுப்பினர்களையும் அங்கு அழைத்து வந்திருந்தார்கள், ஆனால் எங்களைப் பொறுத்தவரை அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்களுக்கான அனுமதி மட்டுமே தரப்பட்டது. 2000, 5000 பாஸ் எங்களுக்கு தரவில்லை, அதனால் அனுமதி சீட்டு உள்ளவர்கள் மட்டுமே அங்கு அனுமதிக்கப்பட்டார்கள், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்ட விழா என்பதால் அவர்கள் யாரை அனுமதிக்கிறார்களோ அவர்கள் தான் உள்ளே செல்ல முடியும். நாங்கள் நினைத்தால் லட்சக்கணக்கில் உடனடியாக கூட்டத்தை கூட்ட முடியும். அப்படி செய்தால் பிரச்சனை வந்துவிடும். அதைத் தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். பிரச்சினை இன்றி சட்ட ஒழுங்கை காப்பாற்றுவது தான் தமிழ்நாடு முதலமைச்சரின் தலையாய குறிக்கோள் அதைத்தான் நாங்கள் செய்கிறோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் தான் ஒருவரை அமைச்சராக வைத்துக் கொள்ளலாமா கூடாதா என்பதை முடிவெடுக்க முடியும். தமிழ்நாடு முதலமைச்சர் எப்போதும் சரியான முடிவு எடுத்து சரியாக செயல்படுவார். அவரைப் பொறுத்தவரை யாரை அமைச்சராக வைத்துக் கொள்வது யாரை அமைச்சராக வைத்துக் கொள்ளக் கூடாது என்ற உரிமை அவருக்கு தான் உள்ளது என்று தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் நேற்று (06.01.2024) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு தேர்வுப் போட்டிகள் - 2023!

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அறிவிப்பு!

சென்னை, ஜன 7-

ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் 17 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்குட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு போட்டிகள் நடத்தப்படாத நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டிற்கு 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் ஹரியானா மாநிலம், பஞ்சகுலாவிலும், 2022ஆம் ஆண்டிற்கு மத்திய பிரதேச மாநிலம் போபாலில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2023ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் 19.01.2024 முதல் 31.01.2024 வரை தமிழ்நாட்டில் நடத்தப்பட உள்ளது. அதற்கான தேர்வுப் போட்டிகள் கீழ்காணும் வகையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு: தடகளம், நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள் (ஆண்கள்): 1) 1500 மீ ஓட்டம், 2) 2000 மீ Steeplechase & 3) குண்டு எறிதல் (5Kg), தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், திருவண்ணாமலை, தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 08.01.2024, காலை 8 மணி அளவில்

விதிமுறைகள்:

பங்கு பெறும் வீரர்கள் 01.01.2005 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்.

பங்கு பெறும் வீரர்கள் கீழ்க்கண்ட சான்றிதழ்களில் ஏதேனும் இரண்டு சான்றிதழ்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஆதார் அடையாள அட்டை (அல்லது) பாஸ்போர்ட், பிறப்பு சான்றிதழ் (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 01.01.2023 அன்றோ அல்லது அதற்கு முன் நகராட்சி/கிராம பஞ்சாயத்துக்கள் மூலம் வழங்கப்பட்டது),

பள்ளி சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்.

பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப்படாது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

கழக அயலக அணி மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு! ஆர்.எஸ்.பாரதி தலைமை! எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

நமது நெஞ்சம் நிறைந்த கழகத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின் படி கழக அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் ஜனவரி 10 - புதன்கிழமை அன்று மாலை 3.00 மணி அளவில் சென்னை - ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா "சமூக நீதிப் போரில் திராவிட இயக்கம்" எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

கழக அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 10 - புதன்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளுக்கு கழக அயலக அணித் தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார் எம்.பி., வழக்கறிஞர். மனு சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள் சேலம் திருமதி.எஸ்.உமாராணி எம்.சி., விஜயன்.ராமகிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி., முத்துவேல். ராமசாமி, சேகர்.ஜே.மனோகர், குமரி.எ.பாபு வின்பிரெட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இரண்டு நிகழ்வுகளிலும் கழக அயலக அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எம்.அப்துல்லா எம்.பி.
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

கழக துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட, மாநகர மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் மகளிரணி மாவட்ட அமைப்பாளர் திலகவதி தலைமையில் மேயர் நாகரத்தினம் ஆதரவற்ற முதியோர் இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வழங்கினார். நிகழ்வில் வீரமணி மாநகர அமைப்பாளர்கள் கனிமொழி, பேபி, லீலாவதி, மாவட்ட பொருளாளர் ப.க.பழனிசாமி, பகுதிக் கழகச் செயலாளர் அக்னி சந்துரு, மண்டல தலைவர் சசிகுமார் உள்ளிட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணியினர், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு

நீலகிரி மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - உதகை நகராட்சி, 18வது வார்டு நகர்மன்ற உறுப்பினருமான கே.ஏ.முஸ்தபா மற்றும் கீழ்குந்தா பேரூராட்சி, 9வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.பாபு ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 05.01.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி செம்பாட்டூர் ஊராட்சி, தண்ணீர் பந்தல்பட்டி கிராமத்தில் புதிதாக பகுதி நேர நியாயவிலைக் கடையை டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்து பொருட்கள் விநியோகத்தை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட கவுன்சிலர் மு.க.ராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் சாமிநாதன், ஒன்றிய சேர்மன் சின்னையா, ஒன்றிய கவுன்சிலர் சுப்பையா,மாணிக்கம், லெட்சுமணன்,முருகேசன், நாகராஜ், கணேசன், ராஜேந்திரன், ராதிகா திருநாவுக்கரசு, ஆறுமுகம், தர்மலிங்கம், செம்பைமனி, ஜோசப், செம்பைகருப்பையா உள்ளிட்டோரும், ஊர் அம்பலகாரர் நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.